# திறவுகோல்

2056 ஆடி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# அணைப்பு ( சிறுகதை )

கல்யாணம் முடிந்த அன்றிலிருந்து, இந்த பதினைந்து நாளாகியும்.. ராதா ஒதுங்கியே நிற்பதை எண்ணி, கணேஷ் பயந்து போனான்.. எத்தனை கனவுகளை சுமந்து, பெரியவங்க குறித்துக் கொடுத்த நாளுக்காக, மூன்று நாள் காத்திருந்து, அவளை வரவேற்க, அந்த இரவு பத்து மணியளவில், காத்துக்கிடந்த கணேஷ், அவள் அறையினுள் நுழைந்த போது, அவன் தாவி அணைத்த நொடியில், ராதா, கொண்டுவந்த பாலை சிதறவிட்டு, அவனை பலங்கொண்ட மட்டும், அவனை தள்ளினாள்.

எதிர்பாராத அந்த தள்ளலில், அவளது கோப பார்வை, அவனை பயமுறுத்திவிட்டது.

"சாரி சாரிங்க.. அய்யோ பால் கொட்டிடுச்சே.." அவளும் பதறி விட்டாள்..

"ஏஏ..ராதா நான்தாம்பா.. என்னாச்சு உனக்கு.. ஏன் இவ்ளோ கோபம்.. பால் கொட்டினத பத்தி பரவாயில்ல.. யார்ட்டேயும் சொல்லி வைக்காத.." அருகே வந்து, அவளின் தோளின் மீது கையை வைத்தவனுக்கு, அவள் உடல் நடுங்குவதை, உணர்ந்தான்..

"என்னாச்சுப்பா.. ஏன் நடுக்கம்.. இந்த நாளை பற்றிய பயமா.." அவன் மெல்ல நடந்து போய், கட்டிலின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தான். சிதறிய பாலை, அவள் துடைத்தவாறே,

"சாரி..சாங்க.." என்றாள்.. அவன் எழுந்து வந்து,

"பரவாயில்ல விடு.. ஏன் அவ்ளோ டென்சனாயிட்ட..பர்ஸ்ட் நைட்'னு, பதட்டத்துல, பயந்துட்டியோ.." அவன் சிரித்தவாறே, அவளோடு சேர்ந்து கொட்டிய பாலை, துடைக்க உதவினான்.

"நீங்க உட்காருங்க நான் பாத்துக்கறேன்" என்றாள் ராதா. மீண்டும் அவன், கட்டிலில் வந்து உட்கார்ந்தான். அங்கிருந்தபடியே அவளின் அழகை மனதினுள் ரசித்தான்..

இவர்களின் திருமணம், 'பெற்றோர் பார்த்து வைத்த திருமணம்' தான்.. கணேஷ்'க்கு, காதல் அனுபவம் இருந்தாலும், அது மூன்று மாதங்களுக்குள், கருத்தொற்றுமை காண முடியாமல், இருவருமே ஒரு நாள், காபி கடையில், காபியை குடித்து முடித்தப்பின், தங்கள் காதலை முறித்துக் கொண்டார்கள்..

அன்றைய பிரிவில் அவனுக்கும், அவளுக்கும் எந்த பிரிவின் வலியும், வரவில்லை..
அதன்பின், காதல் தனக்கு செட் ஆகாது என்ற முடிவில், அம்மாவிடம், முழு பொறுப்பை

கொடுத்துவிட்டான்.

"நீ பார்த்து எந்த பெண்ணும், எனக்கு ஓக்கேமா" என்று சொன்ன நேரம்.. ஒரு திருமணத்தில், அவனது அம்மாவின் கண்களில், ராதா சிக்கி விட்டாள்.. ஒரு மாத காலம் பேசி, ஒரு நாள் பெண் பார்த்து, முடித்த தருணம்.. அம்மா அவனின் மலர்ந்த முகத்தை பார்த்து, முடிவை தெரிந்துக் கொண்டு, அங்கேயே, தங்களுக்கு பெண் பிடித்து போனது, என்று சொல்லி, முகூர்த்த நாளை குறித்துவிட்டார்கள்.

அவளுக்கும், கணேஷை பிடித்து போனது. நிச்சயம் ஆன பிறகு கூட, ஒரே ஒரு நாள் அவனோடு பீச்சில், தள்ளி உட்கார்ந்தே, பேசினாள். கையை கூட தொடவிடவில்லை.. அந்த விசியம் கணேஷ் மனதில், அவளைப்பற்றிய மதிப்பை கூட்டிவிட்டது. இன்னொரு முறை, சந்திக்கலாம் எனறு கணேஷ் கேட்டபோது, அவள் வர மறுத்துவிட்டாள். இனி நம் கல்யாணம் முடிந்தபோது, தான் வண்டியில் வருவேன் என்றாள்.. அதையும் அவன் ரசித்து மகிழ்ந்தான்.

"ப்ளீஸ் இன்னிக்கு பேசிட்டிருப்போமே.." அவள் குரல் கேட்டு, நினைவுக்கு வந்த கணேஷ், அவள் என்ன சொல்லுகிறாள், என்பதை புரிந்தவுடன், ஏமாற்றமாய் ஆனாலும், அதை வெளிகாட்டாமல், லேசாக சிரித்தபடி,

"அதனாலென்ன.. பேசுவோமே விடிய விடிய பேசுவோமே" என்றான்.. உள்ளுக்குள் காலையில், நண்பன் சொன்னது நினைவுக்கு வந்தது.

'கணேஷா.. சில நேரம், சில ஏமாற்றங்கள் வந்து விழும். அதையெல்லாம் ஏத்துக்க வேணும்.. அதுவும், முதலிரவுல, எதிர்பாராத அதிர்ச்சி எல்லாம் வரும்.. தாங்கிக்க தான் வேணும்' என்றானே அது இதுதானோ..

'அப்போ அந்த நேரம் கோபபடவோ, எரிச்சலாகவோ கூடாது.. மாறாக, ஒரு கேன'ப்பய, சிரிப்போடு இருக்கனும்' அவன் சொன்னபடியே,

'நாமும் கேன'ப்பயலாயிட்டோமோ..
மவனே நாளைக்கு இருக்குடா.. உனக்கு..' மனதில் கறுவிக் கொண்டான்.

"என் மேல கோவமில்லையே.." அவள்தான் கேட்கிறாள்.

'ரொம்ப முக்கியம்..' என்று நினைத்தபடி..

"இல்லையே.. என் மூஞ்சை பாரு கோவமாத்தெரியுதா இல்லைதானே.." கேன'யனாட்டம் சிரித்தான். அவளுக்கு கொஞ்சம் நிம்மதி போல.. புன்னகைத்தாள்.. ஒரு வேளை இப்படி நினைச்சிருப்பாளோ..

'ஏன்டா கேனப்பயலாட்டம் சிரிக்கிற..' என்று.. அன்று முதலிரவு.. வெறும் பேச்சாய் போனது.. இரண்டு மணி ஆன போது, கணேஷ்க்கு தூக்கம், சுழற்றிப் போட்டது. அப்புறம் எப்போது தூங்கினான்.. தெரியலை.

காலையில் அவள், காபி கொடுக்க எழுப்பிய போது தான், நேற்றிரவு தான் ஏமாந்து போன இரவு என்று, தோன்றியது. அவள் தந்த அந்த, முதல் காபி, அவனுக்கு கசந்தது.

இப்படி தொடர்ந்து 15 நாளும் தான், ஏமாற்றப்பட்டதை போல, உணர்ந்தான் கணேஷ்..

'இதற்கொரு முடிவு கட்டியாகனும். வீட்டில் பேச விருப்பமில்லை, அவனுக்கு.. வெளியே அழைத்துபோய் பேசியாகனும்.. அப்போதுதான், அவன் நண்பனின் திருமணம், கொடைக்கானலில் நடக்க இருப்பது, நினைவுக்கு வந்தது. அதுதான் 'சரி' என நினைத்து அம்மாவிடம், சொல்லி அவளிடமும் சொன்னான். அவள்,

"நான் வரலை நீங்க போய்ட்டு வந்துடுங்களேன்" என்றபோது அவன் முதல்முறையாய் அவளை கடுமையாக கண்ணை உருட்டி பார்த்துவிட்டு, ஆபீசுக்கு போனான். அங்கு போனதும், தான்..செய்தது தவறு என உணர்ந்தான். ராதாவுக்கு போன் செய்தான்

"சாரிடா.." என்றான்..

"ம்ம்.. என் மேலதாங்க தப்பு.. நான் கொடைக்கானலுக்கு வரேன்ங்க" என்றாள். அவனுக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாகி போனது.

கொடைக்கானலின் குளிர்ச்சி இருவருக்குமே, இதமான சூழலை உருவாக்கி தந்தாலும், அவளுக்குள் பயமே, பிரதானமாய் இருந்தது. திருமணம் முடித்து, வெளியே சுற்றி விட்டு, தங்கும் விடுதி அறைக்குள் நுழைந்த வேகத்தில், அவளை அணைத்து, தட்டாமலை சுற்றியபோது அவள்,

"விடுங்களேன்" என்று கத்தினாள்.. கணேஷ்க்கு ஆத்திரம் வந்துவிட்டது. கோபத்தோடு, அவளை பிடித்திருந்த பிடியை, விட்டான். அவள் பொத்தென கீழே விழுந்தாள். விழுந்த நிலையிலேயே, அவள் அவனை பார்த்தாள். அவனின் கோபமான முகத்தை, இப்போதுதான் பார்க்கிறாள்.

"என்ன நினைச்சிட்டிருக்க நீயி.. எதையாவது சொல்லித் தொல.. என்னை பிடிக்கலையா.. சொல்லிட்டு கிளம்பிக்கோ.. ஆனா கூடவே இருந்து, என்ன கொல்லாத.. முதல்ல எனக்கு தெரிஞ்சாகனும்.. உனக்கு என்னை புடிச்சுதா இல்லையா ? நான் உனக்கு, தாலி கட்டினவன் தானே ? தாலியே கட்டியிருந்தாலும், பொண்டாட்டிக்கு விருப்பமில்லைனா.. தொட கூட கூடாதுனு.. இருக்கறவன் நான்.. ஆனால் நீயும் வந்த நாளிலிருந்து, இன்னிய தேதிவரை.. என்னை ஒதுக்கி வைக்கிற.. என்ன பிரட்சினை உனக்கு.. இதை பத்தி பேசத்தான், உன்னை இந்த, திருமணத்துக்கு அழைச்சிட்டு, வந்தேன். தயவு செய்து, என்னை புரிஞ்சுக்கோ. உனக்கு ஏதும் பிரச்சனையா.. என் கிட்ட சொல்லு.. என்னால என்ன பண்ண முடியுமோ அதை செய்யறேன்.. இல்ல.. சொல்ல மாட்டேன்னா.. இப்பவே கிளம்புவோம்." சொல்லிவிட்டு எழுந்து நின்றான்...

அவள் எழுந்தாள்.. கட்டிலின் ஓரமாக போய் உட்கார்ந்தாள். பேச தொடங்கினாள்.. அவனும் மறுமுனையில் உட்கார்ந்தான்..

"எனக்கு எந்த பிரச்சனையும் இல்லீங்க.. ஆனா நான் சொன்ன பிறகு, நீங்க வெறுத்துடுவீங்களோன்னு, எனக்கு பயம் வருது.." அதை கேட்டதும் அவன்,

"உனக்கு நான் சத்தியம் பண்றேன்.. ராதா.. எதுவானாலும் சொல்லு.. நான் உன்னை வெறுக்க வாய்ப்பேயில்லை.. ஏன்னா, நான் புடிச்சுதான் உன்னை, கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.. பயப்படாம சொல்லு.." என்றான்.

அவள் தன் உதடுகளை, நாவால் ஈரப்படுத்திக்கொண்டு, பேசினாள்.

"நான் டிகிரி பைனல் இயர், முடிக்கும் சமயம் .. ஒரு வருசமா என்னை, தொடர்ந்து தொந்தரவு பண்ணுன, என் 'வகுப்பில் படித்த' ஒருத்தன்.. கல்லூரியின் கடைசி நாளில்.. எல்லோரும் போன பிறகு, நானும் என் ப்ரண்டும், இன்னும் கொஞ்ச நேரம், க்ளாஸில் உட்கார்ந்து போகலாம்னு, பேசிட்டிருந்தோம்.. அப்போ, அந்த பொறுக்கியும், அவன் ப்ரண்டும் உள்ளே வந்து, என்கிட்ட கலாட்டா, செஞ்சானுங்க.. நாங்க எழுந்து போயிடலாம்னு, நினைச்ச நேரம், கதவை மூடி வம்பு பண்ணி, என்கிட்ட வரம்பு மீறினான்.. யாருமே எதிர்பார்க்காத, அந்த விநாடி அந்த பொறுக்கி, அயோக்கியன் என்னை.. என்னை.." மேற்கொண்டு, தொடர முடியாமல், அழ தொடங்கினாள் ராதா. கணேஷ் முதன் முதலாய், அவள் அழுது பார்த்தவுடன், மனமிரங்கி போனான்.

"தயவு செய்து ராதா அழாதே அழுதா.. உன்னை மேலும் பலவீனமாக்கும்.. எதுவா இருந்தாலும் சொல்லு.. நானிருக்கிறேன்" அவனிடமிருந்து, ஆறுதல் வார்த்தை கேட்டதும், ராதா கண்களை துடைத்துக கொண்டு,

"அழமாட்டேன்.. சொல்றேங்க.. அந்த நாய் என்னை, பலவந்தமா கட்டிப்பிடிச்சுக் கிட்டான். அந்த மிருகத்தின் பிடியிலிருந்து நான், சில நொடிகள் போராடி, விலகினேன்.. அப்போ அந்த நாய் சொன்னான்.. போ..போ.. இந்த பிடி உனக்கு எப்பவும் ஞாபகத்துல வரும்.. அப்போ என் முகம் உன் நினைவுக்கு வரும் என்று.. நாளைக்கே, உனக்கு கல்யாணம் ஆனாலும், இது உனக்கு மறக்காதுனு, சொன்னாங்க.. அதை ஒரு.. ஒரு கெட்ட கனவா நினைச்சு, மறக்க நினைச்சேன்.. நீங்க இல்லீங்க.. என் தங்கையும் என் ப்ரண்சும்.. எப்ப கட்டி பிடிச்சாலும், எனக்கு, அந்த நிகழ்ச்சிதான் கவனத்துல, வருது.. அதுதான் நீங்க. முத ராத்திரியில, அப்படி நடந்துக்கிட்டதும் எனக்கு கோவமும் அழுகையும் வந்திச்சு.. இப்பவும் கூட அதாங்க காரணம்.." சொல்லிவிட்ட அவனை பார்த்தாள் ராதா.

அவன் அவளையே, அவளின் அப்பாவி முகத்தை, பார்த்தான். கள்ளமில்லாத அந்த முகம், காதல் முகத்தின், அடையாளமாய் தெரிந்தது. அவளுக்கு தேவை.. ஒரு மனமருந்து. அதை தான் மட்டுமேதான், தர முடியும் என்பதை உணர்ந்தான்.. அவளருகே வந்து நின்றான். அவளும் எழுந்து நின்றாள்.

"நீ உட்காரு ராதா" என்றான். அவன் குரலுக்கு கட்டுப்பட்டவளாய் உட்கார்ந்தாள்.

"ராதா நான் சொல்றதை, கவனமாய் கேளு.. இப்போ இந்த நிமிடம்.. இது கொடைக்கானல், தங்கும் விடுதி அறை, என்பதை மற.. உன்னோட கல்லூரி வகுப்பறை , என்று நினைத்துக் கொள்.. அங்கே நீ உன் தோழி கூடவே, உன்னோட அம்மா, உன் தங்கை இருப்பதை போல, நினைச்சுக்கோ.. நல்லா கண்ணை மூடி.. நான் சொன்னபடி நினைச்சுக்கோ... வேற சிந்தனையே கூடாது.. உன் மனம் முழுக்க உன் வகுப்பையே நினை... இப்போ உன் அம்மாவை கட்டிப்பிடிச்சுக்கோ..வேற எதுவும் நினைக்க கூடாது" என்றான்..

அவள் மெல்ல கண்ணை மூடி, அவன் சொன்னபடியே செய்து, எழுந்து நின்றாள். மூன்று நிமிடங்களில், கொடைக்கானலை, ஹோட்டலை மறந்தாள். அவளது வகுப்பில் இருந்தாள்.. கண்ணை திறக்காமலேயே, வகுப்பை சுற்றி பார்த்தாள்.

தோழி இருந்தாள். ஆனால் அம்மாவையோ தங்கையையோ காணவில்லை. அதற்கு பதிலாக.. 'யாரது..யாரது இது கணேஷா? கணேஷ் ஏன் இங்கு வந்தான்.

"என்னங்க எங்கம்மாவை காணோம்.. ஆனா நீங்கதான், என் எதிர நிக்கறீங்க.. நான் என்ன செய்யட்டும்..?" கண்ணை மூடிக் கொண்டு அவள் கேட்டபோது, கணேஷ்,

"ராதா.. உனக்கு என்ன தோணுதோ செய்.. இல்லை நான் ஏதாவது செய்யட்டுமா..?" அவன் கேட்டான். ராதா,

"எனக்கு தெரியலைங்க.. நீஙகளே செய்ங்க" என்றாள்..

"நீ தடுப்பியே.."

"இல்ல..நான் தடுக்க மாட்டேன்.. சீக்கிரம்ங்க.." அவள் சொன்னதும்.. கணேஷ் மெல்ல அவளை, அன்போடு மென்மையாய், அரவணத்த போது, அவளது உணர்வுகள் எழுந்தன.. அவளது முகத்தின் மீது, அதன் ரேகைகள் சிவந்து பாய்ந்த போது, ராதாவின் கைகள், அவனை ஆரத்தழுவின..

ஆர்ப்பரிக்கும் நதி வெள்ளம், இரு கரைகளை உடைத்து ஓடுவதைபோல, அங்கே இரு மனங்களின், ஆக்ரோசம், அன்பின் வழியே, சங்கமித்து கொள்ள, தொடங்கியது. கொடைக்கானலின் குளுமை, அவர்கள் இருந்த அறையில், ஊடுருவியும் கிடந்த போதும்.. இந்த அணைப்பின் வெப்பமே, அறையெங்கும் பரவிகிடந்தது.. இனி அவளது நினைவில் அந்த நிகழ்ச்சி வராது. அந்த இடம் சுத்தமாய் இருந்தது.



— இரவிச்சந்திரன்,
சென்னை.

---

# என் வானம் நீ

மீண்டும்
நான் குழந்தையாக மாற
உன் அழைப்பு ஒன்றே
போதும்

உன்
ஒற்றை அழைப்பின் வார்த்தை
கரைத்து விடுகிறது
என்னுருவம் அனைத்தையும்

துன்ப இருள்
சூழ்ந்து விட்டது என

நினைத்த போது
விடியலாக வருகிறது
உன் புன்னகை



உன்
பிஞ்சு பாதங்களை
பூமியைப் போல்
நகலெடுக்கிறது
என் நெஞ்சும்

உன்
முத்த ஈரம்
மின்சாரத்தை விட
வேகமாக பரவுகிறது
அகத்துக்குள்

அடுத்த கனமே
பூத்து விட்டது
புறம் முழுதும்

பஞ்சு போன்ற
பிஞ்சு விரல்களால்
முகத்தை வருடுகிறாய்
மேகம் வருடிய
வானமாக உயர்ந்து விட்டேன்

நீ மேகம் என்றால்...
சில நேரங்களில்
வானமாகவும்
சில நேரங்களில்
உன்னைத் தாங்கும்
பூமியாகவும் இருந்து விடுகிறேன்

உண்மையில்
என் வாழ்வில்
எப்போதும் வானவில்லைக் காட்டும்
அதிசய வானம் நீ

மழலையே!
உன் முன்
தலை சாய்கிறேன்...
மீண்டும்
புதிதாகப் பிறப்பதற்காக...

—

சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
பேச - 9944315732

# மௌன ராகம்

உணர்வுகள் வழியே
ஊடுருவி இதயத்தினுள் உட்புகும்
அவள் விழிகள் ..

என்ன சொல்லி கற்றுத் தந்ததோ..
முப்பொழுதும் அவள் பெயரை
உச்சரிக்க நச்சரிக்கும்
மனம்.

இருவரினிடையே நடக்கும்
சொல்லாடலில்
செல்"லாடல் வழி
மறைமுகமாய்
கவிதைகள் பேசும்.

உதாசினப்படுத்துவதாய்
எண்ணி எண்ணத்தினுள்
ஏதேதோ கதைத்தபடி
கண்களை உருட்டுவதில்
வெளிப்பட்டுவிடுகிறது
என் மீதான
அவளின் காதல்.

- சாயிராம்,
தஞ்சாவூர்.

# திரை கடத்தல்

காட்சித் திரை கடத்தும்
மும்முரத்தில் கவிந்த
தலைகளோடு கடக்கிறது
மின்சார இரயிலின்
பெட்டிகளாய் விரையும்
இராவண உடல்.

## பிணைப்பு

இறுதியாக ஒருமுறை
விரல்கள் தொட்டுக்கொள்ள
விரும்புகிறோம்

வார்த்தைகள் தவிர்க்கப்பட
கண்களில் ஊசலாடுகின்றன
நான்கு கரங்கள்

இருபது விரல்களின்
நர்த்தனங்களில் சிதைகிறது
பிரிவின் உருவு

ஒரே கேள்வி
எஞ்சுகிறது

தொடாமலிருக்கையில்
எங்கிருந்து பிணைப்பைத்
தருகிறது காதல்.

## உயிர் வடிவம்

இரும்புக்கதவில்
பட்டாம்பூச்சி வடிவம்
வைப்பவர்களுக்கு
புரிவதில்லை
ஒவ்வொரு முறை
கதவைத் திறக்கும்
பொழுதும் கிழிபடும்
இதயம்.

## சக்கரங்கள்

மௌனித்தவாறு நகர்கிற
மெட்ரோ இரயிலிற்குள்
உயிர்ப்பின் இன்ஜினாக
சுழல்கிறது சிரித்து மகிழும் மழலையரின்
புன்னகைச்
சக்கரங்கள்

## மறக்காத நேற்று

நேற்று வைத்த கண்மை
துடைத்தெடுக்கிறாய்
நேற்று வைத்த பொட்டு
எளிதாகக் கழற்றுகிறாய்
நேற்று பிடித்திருந்த ஆபரணம்
இன்று சுருண்டுகிடக்கிறது
நேற்று நடந்த நிகழ்வுகளை
மடித்து வைக்கிறாய்
நேற்றை நேற்றோடு
இயல்பாக கடத்திவிட்டு
இன்றை விரும்பத் தொடங்குகிறாய்

எப்பொழுதோ
பிரிந்த நம்மின் நினைவுகள்
உன்னில் நேற்றே இன்றா.

—

ரகுநாத். வ,
மதுரை.

# உலக ஓக (யோகா) தினம்

மூச்சுக்கு  பயிற்சி தரும் பிராணாயாமம்
உடலுக்கு புத்துணர்வு வரும் தியானம்
மனமும் உடலும் ஒருங்கிணைந்த ஏகாந்தம்
சிந்தனை சிதறாமல் பெறும் ஞானம்
இறைவன் பிரசாதம் வழங்கும் தெய்வீகம்

உடல் உறுப்புகளை இயக்கும் ஆதாரம்
ஆத்மபலம் வாய்ந்த சித்தா ஆயுர்வேதம்
ரத்தமின்றி சிகிச்சை இந்திய பராம்பரியம்
நோய் நொடிகள் நீக்கும் நிச்சயம்
மாத்திரையில்லா சத்தான உணவே மருத்துவம்

நாடி நரம்புகள் முறுக்கேறும் மகத்துவம்
உடலுக்கு புத்துணர்வு தரும் ஆரோக்கியம்
மனதுக்குள் தெம்பு வரும் அனுபவம்
நல்ல தூக்கம் கொடுக்கும் ஆனந்தம்
ஆயுள் அதிகரிக்க செய்யும் வரம்

சித்தர்கள் ஞானிகளை வழிபடு தினம்
உடலுக்குள் தோன்றும் சக்தி யந்திரம்
மனிதனை தெய்வம் ஆக்கும் மந்திரம்

—

எஸ். வீ. ராகவன்,
சென்னை

# சாமி பிரசாதம் தருவதற்காக

புதிதாய் குடிவந்தவர்களின்
பக்கத்து வீட்டுக்குச் சென்ற
என்னை திண்ணையிலேயே
நிறுத்தி வாங்கிக்கொண்டாள்
அந்த வீட்டுப் பெண்

தட்டை கையோடு
எடுத்துச் சென்றிடுங்களேன்
எனக் கூறியபடியே
அவர் உள்ளே செல்ல
ஏதோ சங்கடமாய்
உணர்ந்து நிமிர்ந்தேன்

வணக்கம் எனக் கைகூப்பி
ஆங்கிலத்தில் வரவேற்றுக்
கொண்டிருந்தது நாகரீகக் கதவு

சிரித்தபடியே விடைபெற்றேன்
தட்டை வாங்கிக் கொண்டு
கதவிடம் வருகிறேன் என்று

ஐயாயிரம் ரூபாய் பட்டுச்சேலை
வாங்கியதும் மனமகிழ்ச்சி
இலவசமாய் இன்னும்
சில குச்சிப்பைகள்

—

பி. ஹேமா,
முசிறி.

# இப்போது சொல்

துக்கத்தின் வாசலிலேயே
வீற்றிருக்கவா
இவ்வாழ்வு

நடையோ ஓட்டமோ
தவ்வலோ தாவலோ
நிகழ்ந்து கொண்டேயிரு

அண்டமென நிறைந்திருக்க
அயர்ச்சி எதற்கு
பிண்டமென பிறந்தாலும்
உயிர் பூசிய உன்னதம் நீ

கேவலம் உடம்பென
சொல்லாதே
சொல்பவரிடம் நில்லாதே

பூக்களைப் போல இரு
காற்றின் கைகளில் மித
மானுடத்தின் உச்சியில் இரு
உண்மையில் அதுவே பெரு

இப்போது சொல்

நித்திரைக்குள் நீந்தாத
நீல வானத்தில்
எந்த நட்சத்திரம் நீ....!

## நெருடாவின் வெளி

தஸ்தாவெஸ்கியின்
இருள்
டால்ஸ்டாயின்
ஒளியினூடாக
ஒரு பொழுதை
விடியச் செய்கிறது

## தேவ தேவனின்

வனத்தில்
சுருண்டு கிடக்கும்
தனிமையை
ஞானக் கூத்தனின்
ரயில் கவிதை
எழுப்பிச் செல்கிறது

## ஓரானின் இரவில்

என் பெயர் சிவப்பு என்று
வெண்ணிலவாய்
மின்னுகிறான்
பாரதி

## மாயக்கோவ்ஸ்கியின்

மௌனத்தை துளைத்து
ஒரு தூரத்து
பயணமாய் ஆகும்
மிகைல் நெய்மியின்
வனாந்திரம்

## கிப்ரானையோ

உமர் கயாமையோ
துணைக்கு கொண்டு
பிரமிளைத் தேடி
அலையும்
நெருடாவின் வெளி

## உன் குலசாமி ஆகிடுவேன்

காட்டுப் பூ போலத்தான்
உன்நினைப்ப நட்டு வெச்சேன்

நட்ட நினைப்பெல்லாம் சாஞ்சிடுச்சே
நடு வனத்துல தான் மாட்டிகிட்டேன்

திசையெல்லாம் மறையுதடி
பாதை இல்லை பழையபடி
காடு மலை சுத்தி வந்த
நம்ம எங்க காணோமடி

நீ இல்லாத பக்கத்துல
எனக்கு நானே தூரமடி
தூரமெல்லாம் உசிரெடுக்க
உள்ளுக்குள்ள பாரமடி

ஆகாயம் நழுவி வந்து
ஐயோன்னு கத்துதடி
வெந்த புண்ணு வேதனல
இன்னும் கொஞ்சம் வேகுதடி

என்ன சொல்லி இன்னும் சொல்ல
சொல்லு சொல்லு நானும் சொல்ல
உன் நெஞ்ச தொட்ட ஞாபகத்த
எங்க கொண்டு நானும் கொல்ல

காலையில கலியாணம்
மத்தியானம் புருஷன் ஊரு
நோவு புடிச்ச கோழி போல
வீதியெல்லாம் தேடுறேனே

மருதாணி வெச்சு விட்ட
மசமசப்பு தீரலியே
அதுக்குள்ளே வேரோட
நிற வாசம் தீர்ந்திடுச்சே

அரட்டி அழுது ஓய
ஆத்தாவ தேடுதடி

அவளும் இல்லையடி
அநாதை நாயானேன்

வருஷம் பல ஓடும்
வாழ்க்கை முடி போடும்
சொல்லியனுப்ப நான் மாட்டேன்
ஆனாலும் வந்து பாரு

செத்த பொணம் அழுகுமம்மா
செத்தும் கனம் தாங்காது
கத்த கத்த கூடுமம்மா
ஆசை மனம் தூங்காது

அழுகை வந்தாலும்
படக்குன்னு அழுதுடாத
நல்லவன்தான் உன் புருஷன்
மன்னிக்கத்தான் மாட்டானே

ஊரோடு கசங்கிட்டு
ஊரோடு போய்ச் சேரு
குளிக்கையில அழுது தீரு
சத்தியமா சொல்லுறேண்டி
உன் குலசாமி ஆகிடுவேன்

—

கவிஜி

# ஒரு மௌனப்பிளிறல்

அதனுடைய கால்கள் வலி
மறுத்துவிட்டன
வாய்க்கு வந்தபடியெல்லாம்
வசைகளை மனதோடு
கண்டுணர்ந்து சென்றாயிற்று
கரமும் கால்களும்
பாதைகளை ஒன்று சேர கடந்தன

அதனுடைய பார்வைக்கு
நான் காரணம் சொல்ல முடிவதில்லை
காரணமில்லாத மௌன
குறுக்கு கோணங்களுக்கு
ஆரம்ப புள்ளியென்பது
தொடங்கிய இடத்திலேதான்
முடிவடையும்

யானை காதில் எறும்பேறும்
கதையெல்லாம்
காது மடல் உதறி காலில் போட்டு
மிதிக்கும் வரையில்தான்
என்ன செய்ய
யானையும் ஒருநாள் சுண்டெலி
வழிதானே
நடைபோடக்கூடும்
சுண்டெலியும் ஒருநாள் யானையில்
பாத நுனியில் சிக்கத்தானே செய்யும்

கற்களும் சொற்களும்
குத்திய தடத்திலெல்லாம்
நேற்றும. இன்றும்
நாளையுமொரு அனுபவம்
இருக்கட்டும்
இறுக பற்றிய இருசக்கர வாகனத்தில்
இடதும் வலதுமாய்
காது மடல் அசைந்தாடிடும்
யானை வலம்
தும்பிக்கை சற்று தூக்கிய பிளிறலில்....

## வெறும் செருப்பு

அப்பாவிற்கு நன்றாக தெரியும்
வெயிலில் நான் நடந்தால் சுடுமென
தோளில் என்னை
தூக்கி நடக்கும் அப்பாவிற்கு
அவரின் பாதங்கள் நோவினை
அறிந்த்தேயில்லை
ஆனாலும் நான் கேட்கும் போதெல்லாம்
அவர் சொல்வதெல்லாம்
வெறும் வெயில்தானேயப்பா என்று
இறங்கியது
கையில் எடுத்து தூரமெறிந்தேன்
எனது செருப்பை
அப்பா என்னிடம் கேட்டார் ஏனென்று
நானோ வெறும் செருப்புதானேப்பா
என்றேன்...
பாதங்கள் நடைபோட்டன
நம்பிக்கையிலும் அன்பிலும்.....

## மனித வடிவில் செந்நிற வால் குரங்கு

எனக்கு ஒரு மரத்தடி நிழல் போதுமானது
நான் புத்தனென யாரும் நினைத்து
விடாதீர்
அவ்வப்போது
மனதின் மேகங்களை வரிகளாய்
தெளிக்க கற்றவன்
அவ்வளவுதான்

தும்பிகளை பிடித்து
வாலில் நூலினைக் கட்டி
பறக்கவிட்டவன் நான்
இல்லாத எனது வாலில்
வாழ்வின்
செந்நூலின் தடங்கள் நூறு

நான் அவ்வப்போது
எனது நிழலை இரசித்துக் கொண்டுதான்
இருக்க விரும்புகிறேன்
ஏனென்றால்
உனது சுயம் அறிந்தால் தானே
எதிராக அமைந்த சுயத்தை
சூதுவாதற்று காண இயலும்

## எந்த இரவும்

இன்றிரவினைப் போல்
என்னை மொத்தமும்
தின்று
மென்றுணரவில்லை

எனது மூக்கில்
புள்ளியிட்ட அளவிற்கு
சில வளைவுகளும் நெழுவிகளும்
அழகிகளின்
மெலிந்த இடையோரமே
சற்று அமரவைத்தன

காலி டப்பாக்களின்
நிரம்பிய வெற்றிடங்களில்
நானாகத்தான்
சிறு துளை பிரிக்கிறேன்
பல நிலைகளை துளைக்கிறேன்

பகிர்ந்த்துண்டு உண்ணும்
பன்முக மனங்களினைத்தான்
நீங்கள் கூண்டிலிட்டு
பூட்டோடு கவலையும்
சிறையாய் கொடுத்து விடுகிறீர்

நான் பறக்க நினைக்கிறேன்
அழகினை திறந்து சிரிக்க நினைக்கிறேன்
சிறு அன்பின் துளைப் போதும்
சிறையின் கம்பிகள்
எனது சிறகுகள் பறக்க உதவும்
மரத்தின் உந்து கிளைகள்....

இனியே பறக்க துவங்கலாம்
துளைகளில்லா மனங்களில்
பறக்க துவங்கிடும்
பறவை மனங்களுடன்....



—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.

# தன்முனைக் கவிதை

மழை மேகம்
மறைந்தது வானம்
மரத்தின் உச்சியில்
திசைத் தேடும் பறவை ...

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# நிலா சோறு

மாலை நேரம் கதிரவன் ஒளி களைந்து
மேகங்கள் இருள் சூழ.
குளிர்ந்து தென்றல் அது
என் மேனி படர்ந்தது..

மனம் ஏனோ சற்று இளைபாறலாமே
என்று எண்ணி என்னை மொட்டைமாடி
செல்ல பணித்தது..

மொட்டை மாடி படிகளில் ஏற என்
கால்கள் எத்தனிக்கும் போது...
அப்பா என்ற குரல்...

வண்ணத்து பூச்சி அது குயில் குரல்
கொண்டு அழைத்தார் போல்

என் மகள்
அவள் இரு கை கட்டிக்கொண்டு
சுவற்றில்

ஒய்யாரமாக சாய்ந்துவாரு
எங்கே...?
உங்கள் மொட்டை மாடி கவி
அரங்கிற்கா என்று வினவினாள்...

புன்னகை என் முகம் தழுவ
ஆம் என்றேன்...

சிறு சினுங்களுடன் நானும் என்றால் இரு
கை தூக்கியவாறு..

அவளை அள்ளி அணைந்து கொண்டு
மொட்டை மாடி வந்தேன்...

சுற்றும் இயந்திரமான வாழ்வில்
நிசப்தமாக ...
பரபரப்பின்றி ..
அமைதியாக ....
மொட்டை மாடி எங்களை
வரவேற்றது...

கதிரவன் ஒலிகளைந்து மதியவள் ஒளி
ஏற்கும் நேரம் ...
வானம் சட்டென்று சிவந்து நிற்க
முழுமதியவள் எங்கள் முன்...

ஒருவேளை அவள் முகம் கண்ட
நாணத்தில் தானோ சிவந்தது வானம்.!!!..

புரியவில்லை மெய்மறந்து நின்ற என்னை
அது கடத்தி சென்றது கடந்த கால
நினைவுக்கு...

வானொலி அறிமுகமாகி
தொலைக்காட்சி அறிமுகம்மாகாத
காலம்...

மாலை பொழுதில் கவலைகள் மறந்து
நண்பர்களுடன் ஓடி ஆடி அலாவிய
காலம்..

மின்சார விளக்குகள் இன்றி தெருவிளக்கு
ஒளிதனில் இருள் நிறைந்து....
ஒளிக்குறைந்த... அந்த பொழுதுகளில்..

முழு நிலவு நாள் அன்று நிலவின் ஒளி
மிகுந்து அந்த இருள் அடங்கி இருக்கும்..

கண்ணாமூச்சி..

*I Spy...*
கொலை கொலையா முந்திருகா...
ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூ பூத்து...
என்று
அந்த ஒளிதனில் எங்கள் ஒலியே மிஞ்சி
இருக்கும் ...

இந்த ஒளியும் ஒலிகளை மிகுந்து
ரசித்தவாறு பெரியவர்கள் வீடுகளின்
முன் ஓலை பாய் இட்டு குழுமி
நாள் பொழுதின் கதைகளை பேசி
மகிழ்வர்..

தென்றல் அது வென்சாமரம் வீச
அம்மாவின் குரல் அதனுடன் இணைந்து
ராகம் பாடும்..

மணி ஆகுதியா ..!!!
ஒரு வாய் சாப்பிட்டு படு ....!!!
பள்ளிக்கூடம் போக வேண்டாமா...??
என்று அவள் அழைக்க அந்த
நிலவொளிதனில் எங்கள் ஒலி மெல்ல
அடங்கும்...

அதுவரை குழுமி இருந்த பெரியவர்
கூடம் அற்றுடன் நிறைவுபெறும்
குடும்பதுடன் கூட...

வயல் வேலை முடிந்து
மாலை நேர சமையலுடன் ஆவி பறக்க
குடும்பமாய் அமர்ந்து ..
பாட்டி உருட்டி தர
நாங்கள் நிலவொளியை ரசித்தவாறு
உண்போம்...

சின்னஞ்சிறு கதைகளுடன் பாட்டி தரும்
உருண்டை அளவாவிய ருசி இன்றும்
நாவில்...

உண்ட பின் அவள் மடிதனில் தலை
சாய்க்க...
எனக்கும் என் தம்பிக்கும் நடக்கும்
போர்தனில்
தன் மடிதனை இருபுறமும் ஆளுக்கு
ஒருபக்கம் என்று போரை
முடித்துறைபாள்...

போருக்கு பின். .
எங்கள் தலைகள் கோதியவாறு
அவள் கூறிய கதைகள் அந்த
நிலவொளியுடன்
இணைந்து தென்றலும் மேவ
கிடைத்த தூக்கம்
இன்றும் பசுமையான நினைவுகளுடன்...

எட்டா கனியாக...!!!!

சற்றெண்டு யாரோ என் கை தொடுக்க
திரும்பிய என் முன்.....
என்னவள்...
என்ன கவிஞரே ஆழ்ந்த
சிந்தனையில்.???.
என்ன வேண்டும்???? என்றாள்..

புண்முறுவலுடன்...

நிலா சோறு
அன்பே.....!!!!!!!!!
என்றேன்....!!!

—

கவிபாரதி. சதீஷ்

# நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு

மறக்கத் தெரியாதா பாடல் ஒலித்ததும்
ஒலியளவைக் கூட்டியபடியே
கண்ணதாசன் எனச் சிலாகிக்கிறார்
தேநீர்க் கடைக்காரர்...

ஆகா...
எம்எஸ்வி என்றபடி உப்பு பிஸ்கட்டைச்
சுவைக்கிறார் மற்றொருவர்...

பி.சுசீலா குரலில் இழையவிடறாங்கப்பா
என்றவர் தலை நிமிர்த்தாமலே தினத்தந்தி
பார்த்துக் கொண்டிருந்தார்...

எதையும் கண்டுகொள்ளாதவனாய்
உன் பெயரை முணுமுணுத்தபடியே
தேநீரை உறிஞ்சுகிறேன் நான்;

இளஞ்சூட்டோடு
தொண்டைக்குழிக்குள் இறங்கி
இதயத்தை இனிப்பால் நிறைக்கிறது
சர்க்கரையில்லாத் தேநீர்.

- இனியவன் காளிதாஸ்

---

# காதல் போக்குவரத்து

உன் சிவப்பு விளக்கு
சில
சமயங்களில்
பச்சைக்கொடி என
எனக்குத் தெரியும்

மஞ்சளுக்குப் பின்
பயணத்தை
தொடரும்
பச்சை தானே
விழ வேண்டும்

ஆனால்

உன்னிடம் சில
சமயங்களில்
சிவப்பு விழுவதை
என்னால் யூகிக்க
முடிவதில்லை

உன் சிகப்பு
நாட்களில்
நீ
கருப்புக் கொடி
காட்டாமலே
பச்சை விளக்கை
எரியவிட்டிருப்பேன்
நான்

மேம்பாலப்
பணிகளை
விரைவில்
முடித்துவிடு

சிக்னல் தொல்லை
தாங்க
இயலவில்லை

- நேசமுடன் ஈசு

# ஆழியம்மா

வயிறு பருத்த ஆழியம்மா நீ
வந்த சுவடு காணலையே
உருண்டு பூத்த தண்ணியில நீ
உசுர் அடுக்க சுமக்கரையே
இரகசியங்கள் புதச்சிருக்க நீ
இராப்பகலா சுழன்றிருக்க
எல்லையத் தான் விரிச்சிருக்க நீ
எங்கையும் தான் படர்ந்திருக்க
அலைய வேலியா போட்டிருக்க நீ
அதன் சத்தத்தநூலா கோர்த்திருக்க
மலையும் பாறையும் உனக்குள்ளே நீ
மறச்சு ஒளிச்சு வளக்குற
பெரிசு சிறிசுஆழியா நீ
பேரோட வாழற
பலநாட்டு வாசலா நீ
பாதம் பதிக்க வைக்குற
நாடுவிட்டு நாடு போக நீ
நல்ல வழி காட்டுற
கண்டம் வந்து பிரிச்சாலும் நீ
கலங்காம நெலைக்குற
சூரியனார் கேக்கையில நீ
சுத்தத் தண்ணி தந்திடுற
நாக்கு சுவை உணவுக்கு நீ
நல் உப்பு செஞ்சிடுற
மிதக்கும் கப்பல் தோணிய நீ
மீட்டெடுத்து காட்டிடுற
மீனை அள்ளும் மீனவர்க்கு நீ
மெத்த தாயி ஆயிடுற
வானில் வரும் மழைத்துளி நீ
வாழ்த்தும் அந்த உயிர்த்துளி
அம்மா வா நீ இருந்தா
அழகு பூமி நிலைக்குதடி
கோபம் கொண்டு நீ எழுந்தா
கொடும காட்சி காட்டுறடி
வாழும் இந்த பூமி பந்த நீ
வாழ வெச்சே காட்டிடடி.

—

விண்மீன்,
சென்னை.

# நயமென வாழ்வு!

*பா வகை:*
(கலித்தாழிசை)

பயனென வாழ்ந்திட பாங்கென ஆகுமே
முயற்சியை வாழ்வினில் முழுமையாய்
முயற்சியை வாழ்வினில் முழுமையாய்ச்
செய்திடு
நயமென வாழ்வுமே நன்றென மாறுமே
வியப்புடனே!

அயர்ந்திடும் வாழ்வோ அழகென மாறுமோ?
முயன்றிடா வாழ்வும் முள்ளென
முயன்றிடா வாழ்வும் முள்ளென மாறுமே
உயர்ந்திடும் எண்ணமே உயர்வினைத்
தந்திடும் புவியினிலே!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



# அன்பின்

முன்பக்கம் நீயும்.
அதன் பின்பக்கம் நானும்.
/

சட்டைப் பையில்
சில்லறையின் கணமும்
மனதில் இரக்கமும்
கூடிக்கொண்டே வருகிறது.
எதிரில் கோயில் வாசல்.
/

ஒவ்வொரு மரமும்
எதிர்காலத்திற்கென
அதன் தலைக்கு மேல்
சேமிக்கிறது
முகில் கூட்டங்களை.
/

எங்கிருந்தோ விழுந்த
ஓர் ஒற்றைத்துளி
தன்னை மழையென்று
சொல்லிக் கொள்கிறது.
/

செய்து முடித்து
உண்டு மீதமான காதலை
பத்திரமாக எடுத்துவைக்கிறேன்.
நாளைக்குத் தேவை என்று.
/

மின்சாரமின்றி
இயங்கத் தயங்குகிறது
நவீனவாழ்வு.
/

தாழிட்ட வீட்டின்
சன்னல் கதவினை திறப்பதும்
மூடுவதுமாய் இருக்கிறது காற்று.
/

என் ஏக்கப் பெருமூச்சை
மொத்தமாய்க் கொண்டு
செல்லுமவள் பேரழகி...!
/

முதலில் கொதித்தது
பொத்தி வைத்த
உலை.
/

என்னவள் பூச்சூடிக் கொள்ளும்
தருணங்களில் கூந்தலில்
பூக்கிறது பூக்கள்.
/

அமைதி வீற்றிருந்த இடத்தில்
என்பங்களிப்பாய் மௌனத்தை
விதைத்து விட்டு வந்திருக்கிறேன்.
/

கடவுளைக் காண
எல்லோரும்
வரிசையில் இருக்கிறார்கள்.
அவரும்
தர்மம் பிழறாமல் வரிசையாக
ஒவ்வொருவரையும் தரிசிக்கிறார்.
/

உதிர்ந்த சருகும் இறகும்
பாரபட்சமின்றி

ஒன்றாய்ப் பயணிக்கிறது
என் கவிதையில்.
/

பறவைகளுக்கு
இரையை வீசுகிறேன்.
அவை -
கொத்திக் கொத்திச்
சுவைக்கின்றன என்னை.

—



பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.

---

# கேள்வி

கேள்விகளும் பதில்களும்
 அறிவுப் பெட்டகங்கள்
அறிவான கேள்வியெது?
செறிவான கேள்வியெது?
அறிவிலியான கேள்வியெது?
அபத்தமான கேள்வியெது?
கேள்வியில்லா பதிலெது?
பதிலில்லா கேள்வியெது?
கேள்வியைக் கேள்வி கேட்கும்
கேள்வியெது?
இவைகள் என்றும்
சிந்தனையைத் தூண்டும்
வேள்விகள்

## நினைவுகள்

நினைவுகளைச் சுமந்து
திரிபவர்களின்
தற்போதைய இடத்தை
தவறாகவே காட்டுகிறது
கூகுள் வரைபடம்

## செவிமடுத்தல்

புறணி கேட்க
செவிகளைத் திறந்து
மனதைப்
பூட்டிக் கொள்பவர்களின்
செவிகள்
முதியோர்
பேசும் போது மட்டும்
வேறு பக்கம்
திரும்பிக் கொள்கின்றன
திறந்த செவிகளை
எதிர்நோக்கி
காத்துக் கிடக்கிறது
முதியோர் உள்ளம்

## ஊனம்

சாலை விபத்து
வெற்றுப் பார்வையுடன்
உச் கொட்டியவாறு

கடந்து செல்கிறார்கள்
சிதறிக் கிடக்கிறது
மனிதம்

சாமான்ய வாழ்க்கை

அம்மாவின் புலம்பல்
மனைவியின் கோபம்
கல்லூரி கட்டண நிலுவை
மருத்துவச் செலவுகள்
அலுவலக பணிச்சுமை
கல்யாண வயதில் மகள்
மகனின் வண்டி கோரிக்கை
படுத்த படுக்கையாக அக்காள்
கழுத்தை நெரிக்கும்
மாதத்தவணைகள்
எறும்பு மொய்க்கும் சிறுநீர்
எப்போதும் உச்சத்திலிருக்கும்
இரத்த அழுத்தம்
வீட்டிற்குள் நுழைந்ததும்
இவையனைத்தும்
கணநேரத்தில்
மறந்து போகின்றன
புரூனோவின்
அன்பின் குழைவிலும்
வாலாட்டலிலும்

—

பா. சிவகுமார்

---

# எல்லையில்

எவருமற்ற தனிமையில்
எத்தனை காலம்தான்
எதிரில் நிற்கும் முனியை
மிரட்டுவது
என்ற ஏக்கத்தில்
அசைவற்றுப் போகிறது
ஐயனாரின் அரிவாள்.

நெடுநேரமாக

யாருமற்ற தனிமையில்
மரம் விட்டு மரம்
தாவித் தாவி விளையாடும்
பறவையின் இறக்கையில்
காற்றை நிரப்பியனுப்புகிறது
ஊஞ்சலாடும் கிளையில்
ஒட்டிக்கிடக்கும் இலைகள்

வழக்கமென வாசத்தை நுகரவைத்த

மல்லிகையைத் தாண்டி
இறுக அணைத்துக் கிடந்த
சாளரத்தைத் திறந்தபடி
தனிமையில் நிற்கிறேன்
பேரன்பைச் சுமந்தபடி
உறங்கும் உன்னைக் கலைக்காது
ஓரடி எட்ட நிற்கவைத்த
நேற்றின் மனக்கசப்பு
என்னையே ஆட்டிவைக்க
எட்டிப்பார்க்கும் ஆதிக்க வெறியை

அணைத்துக் கொள்ள
தேடிவரும் உந்தன் சுவாசத்தில்
என்னை நான்
இளைப்பாற்றிக் கொள்கிறேன்
அறைக்குள் பரவுகிறது
பருவ மழைக்குச் செழித்த
பசுமையெனும் வனத்தின் வாசம்.

## பெய்யும் மழையில்

விடத் தெரியாமல் காகிதக் கப்பல்களை
ஏந்தியபடி
காத்திருக்கும்.
ஓடும் படங்களில்
வழியும் பாசத்தில்
தன்னையே கிள்ளிக் கொண்டு
தனித்திருக்கும்.
பள்ளியின் மேடையில்
பெற்றோருடன் பரிசு பெறும்
பக்கத்திருக்கை தோழியை
பார்க்கப் பார்க்க
எரிச்சலில் மிதக்கும்.
மிதிவண்டியில் பெடலிடுகையில்
தடுமாறி விழுகையில்
காயத்தை ஊதி எச்சில் வைக்க
கரத்தைத் தேடும்
பிறந்தது முதலே
பெற்றவனைப் பார்க்காதிருக்கும்
பிள்ளையைத் தேற்றாமல்
பிதற்றுகிறேன்
பிரிவின் கொடுமையில்
தேசம் தாண்டிய
அப்பனாய்.

## எல்லா உதடுகளிலும்

எப்போதாவது உட்கார்ந்து விடும்
இசைஞானியின் கோர்வை
உறக்கத்தைக் கலைத்திடும்.
கேட்கும் பறவையின் ஒலிக்குள்
ஏதோ ஒரு இசையை
தேடித் திரியும் மனதில்
மிஞ்சி நிற்கிறது சோக கீதம்.
எங்கோ கேட்கும் விலங்கின் சத்தமும்
கொடூரத்தின் இசையென
செவிக்குள் நுழைகிறது
மழலையின் தெளிவற்ற
உலறலுக்குள்
மயக்கிடும் இசையின் மாயத்தை
உணர்ந்து வெறிக்கூத்தாடுகிறது உள்ளம்
சாலையில் நகரும்
சாவு வண்டியின் தாளத்திற்கு
தன்னையறியாது துள்ளி விடுகிறது
கால்கள்.
பள்ளியில் இருக்க விடாத
இசையின் அரூப ஒலிகளுக்குள்
தன்னையே கரைத்துக்
கொண்டிருக்கிறான்
வெட்டியானின் வாரிசு.

## கோபத்தின் உச்சியில் குதிக்கும்

மனதை சரிசெய்ய
உலவிடும் கால்களுக்கும்
உலறலாகும் பாடலுக்கும் மத்தியில்
நின்றுவிடும் தருணத்தைத் தேடுவேன்
வியப்பின் எல்லையில்
என்னையே திரும்பிப் பார்க்கும்
நொடிக்குள்
எட்டிப்பார்க்கும் கர்வத்தை
அழுத்தி விடுகிறது
உள்ளே ஒளிந்திருக்கும்

தோல்வியின் வடு
பொதிமூட்டையென
சுமக்க முடியும் தருணத்திலும்
நிராயுதபாணியாகவே
அடைக்கப்படுகிறேன்
கல்லறைப் பெட்டியில்.

## நெடுஞ்சாலைப் பயணங்களில்

நேர நெருக்கடி அவசரமூட்ட
விரைவைத் தூண்டும்
மனதிற்குள்
எட்டிப் பார்த்துவிடும்
என்றோ கண்முன் நடந்த
விபத்தின் பிம்பம்.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



---

# உயிர்வலி

என் கண்களில்
கருணை
இல்லையாம்
யாரோ
சொன்னார்கள்
உண்மைதான்,

சட்டென விழும்
பூச்சியின்
கல்லறை தானே
என் கண்கள்.
உறுத்தி எடுப்பது
என் உயிர் வலி
என்றே எண்ணித்
துடித்தேன்
ஒற்றைப்
புள்ளியாய் என்
கண் குளத்தில்
கரை ஒதுங்கிய
பின்பே தெரிந்தது

அது என் உயிர்வலி
அல்ல அதன்
உயிர் போகும்
வலியென்று.

—

மணிபாபு,
கீழ் ஜெயினத் தெரு,
மன்னார்குடி.
அலைப்பேசி: 9943835819

# என்னைப் பற்றி எழுதியதாய் என்னிடம்

கொடுத்த புத்தகத்தில் உண்மையாக
நானில்லை அவனுக்குப் பிடித்த
ஒருவனைப் பற்றி அவன்
எழுதியிருக்கின்றான்
இப்படித்தான் உலகம் சொல்லும்
கதைகளில்
நிஜத்தில் அவர்கள் வாழ்வதில்லை
அதற்குப் பிடித்தபடி உலகம் சொல்லிக்
கொண்டிருக்கின்றது....

தெளிவிழந்த வானின் ஆடிமேகக்
கூட்டங்கள் பற்றிய ஒரு கவிதையை
எழுதிக் கொண்டிருக்கிறேன்...
இறுதியில் மிஞ்சப்போவதோ ஒரு கவிதை
மட்டும் தான்....

நிமிர்ந்து பார்க்கையில் என்னைவிட்டு
வெகுதூரம் கடந்திருக்கும் அந்த
மேகங்கள்...

காட்சிப்பிழைத்தவானுக்கு எப்படி
ஒப்பாகும்
என் கவிதை....

காட்சிப்பிழைத்த அட்டைகளால்தான்
தரமான புத்தகங்களை
தவறவிட்டிருக்கிறது
இந்த உலகம்....

அப்படிதான் நானும் கசக்கியெறிந்த
காகிதத்தின் கானல் கதாபாத்திரம்
மட்டுமே...

## முத்தமிடுவதில்லை

நவீன உலகின் நண்பர்கள்
யூதாசைப் போல்

## உலகையே ஆள்கிறாள்

அன்று தப்பிப் பிழைத்தவள்
கள்ளிச் செடியிடம்

## பல்லாயிரம் கேள்விகளுக்கு

சாதாரணமாக பதிலளித்துவிடுகிறது
சிறு புன்னகை

## தாகந்தணித்த விலங்குகளை

வேடனுக்கு காட்டிக்
கொடுத்துவிடுகிறது
ஈரமான நதிக்கரை

## வலிமிகுந்த வரிகள்

கவிதையில் கையொப்பமிட்டிருக்கிறது
ஒருதுளி கண்ணீர்

## இரசித்து விடுங்கள்

இன்று மட்டுமே மலர்ந்திருக்க கூடும்
ஏழைகளின் புன்னகை

—

கவியாசகன்

# வெகுளி

ஐம்பதாயிரம் தான் இருக்கும்,
கட்டு எடை குறைவாக இருக்கிறது
என கூட்டத்தில்
பணத்தை வைத்திருந்த
படிக்காத நண்பன்
கூறியதும்
கொஞ்சம் கிராமத்தின்
வெகுளித்தனமான வாசனை
அடிக்க ஆரம்பித்தது....

## ஆகாயம்

வீட்டின் முன்வாசலில்
அகண்ட பாத்திரத்தில்
குருவிகளுக்கான தண்ணீர் வைக்கப்
பட்டதும்
கொஞ்சம் பொறாமை பட ஆரம்பித்தது
வானம்...

—

இரா. மதிராஜ்,
டிஎம்இ, எம்பிஏ,
புதிய எண் 3/79,
அலப்பட்சாக் கவுண்டன் புதூர்,
காடையூர் அஞ்சல்,
காங்கேயம் - 638701

---

# திசையறியா பயணம்!

இலைகளற்ற வானில்
பயணத்தின் முடிவே தெரியாது
வானத்தை மட்டும் நோக்கிப் பறக்கிறேன்.

கீழே ஓர் மரம் கூட இல்லை -
அதிலாவது அமர்ந்திருக்கலாம்.

மின்னலும் பேரிடியும்
என் தோள்களில் நிற்கின்றன
திசை தெரியாமல்
நிழல் தெரியாமல்
நான் மட்டும் பயணம்...

- அகாஸ்ரீ
(சா.கணேஷ் குமார்)

# கல் நெஞ்சக்காரன்



முதன் முதலில்
கல்லை ஆயுதமாக
பயன்படுத்தியவன்
பரிணாம வளர்ச்சியில்
பல மயில் கற்களை
கடந்து வந்த போதிலும்
இன்னமும்
இறக்கி வைக்காமல்
தன் நெஞ்சோடு சுமக்கிறான் கல்லை!

- பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001

# சொன்னது நீ தானு?...

அது தெரியும்
இது தெரியும்
என பட்டியிலிடாதே
செயலாக்கு

எனக்கு மட்டும் ஏன் தொடர்
தோல்விகள் என
கழிவிரக்கம் கொள்ளாதே
காரணம் தேடு

பிறிடத்து எதிர்ப்பாக்கும்
உண்மையை/ நியாயத்தை
முதலில் உனக்குள் கேட்டுப்பார்

விமர்சனங்களை வார்த்தையில்
இருந்து பிரித்து
அதன் நியாங்களை யோசி

என
சொன்னது 'புத்தி'
கேட்டது 'மனது"....

## இதனாலும்...

பொருளாதார
காரணிகள் தான்
பெரும்பாலும்
பசிக்கான காரணம்
என்றாலும்

காலங்கடந்ததால்
கிடைக்காத உணவு
கிடைத்தாலும்
பிடிக்காத உணவு
இருக்கின்ற இடத்தில்
கிடைக்காத உணவு
பய பதற்ற உணர்வில்
உண்ணும் மனநிலை
இல்லாமை

என இதனாலும்
பசி இருக்கலாம் தானே?

## மாற்று வார்த்தையில்...

எண்ணங்களின்
வேறுப்பாட்டில்

செயலாக்க பயணத்தில்
திருப்தியின்மையில்

முடிவுக்கான
நம்பிக்கையின்மையில்

உதட்டு மொழியின்
தெளிவின்மையில்

தகுதிக்கு மீறிய
மிகை இலக்கில்

எதிர்மனிதரிடம்
'தெரியலே'

என சொன்னால்

உடன்பாடின்மைக்கு
மாற்று வார்த்தை

## சுமை குறைப்பாய்...

இழப்பின்
வேதனையை

எதிர்பார்ப்பின்
பயத்தை

ஏளனத்தின்
கடினத்தை

தோல்வியின்
நம்பிக்கையின்மையை

தனக்கானவர்களிடத்தில்
தயக்கமின்றி
கொட்டுகையில்

வேறு
சொல்லற்று
செயலுமற்று
மொத்தமாய்
நிறைந்திருக்கும்
மனச்சுமைகள்
காணாமல்
போவோதோ
குறைந்தபட்சமாய்
குறைவோதோ
உண்மையோ
உண்மை

அதிலிருந்து
மீண்டு வர
கிடைக்கும்
உதவியும்
ஆலோசனையும்
தன் முயற்சி எல்லாம்
வேறு கதை

## வாழ்வியல் சுதந்திரம்

விரும்புபவன
விரும்பாதவற்றை
பயமில்லாமால்
பெற்றோர்களிடம்
பிள்ளைக்கான
சுதந்திரம்

சொன்னது
விளக்கியது
நடத்தியது
புரியவில்லை
மீண்டும் ஒரு முறை
எனக்கு அறியும்
வகையில் பாடத்தை
நடத்துங்கள் என
தைரியமாய்
உண்மை பேசும்
மாணக்கர்கள் சுதந்திரம்
ஆசிரியர்களிடத்தில்

இது இதனால்
சரியாய் வரும்
அது அதனால்
சரியாய் வராது
என தயக்கமின்றி
மேலுள்ளவர்களிடம்
சொல்லும்
செய்பணி சுதந்திரம்

யோசிக்காமால்
பின்விளைவுகள் பற்றி

எண்ணாமால்
தவறு செய்து விட்டேன்
உணர்ந்து விட்டேன்
மீண்டும் நடக்காது
ரத்த உறவுகளிடத்து
மறைக்காமால்
உண்மை சொல்லும்
சுதந்திரம்

பேச்சில்
எழுத்தில்
படைப்பில்
நாம் யோசித்தை
உணர்ந்ததை
தைரியமாய்
மற்றவர்களால்
ஏற்கப்படுமா
என யோசித்து
தயங்காமால்
வெளிப்படுத்தும்
கருத்துச்சுதந்திரம்

## அந்தந்த நேரத்தில் மட்டும்

எதிர்பார்த்து
பயந்து கொண்டிருந்த
இழப்புகள்
உண்மையில் இல்லை
என்றவுடன்
எதுக்கும் மனபயம்
கொள்ளக்கூடாது

எதிர்பார்த்த
உவகை
உண்மையில்
கிடைக்கவில்லை
என்றவுடன்
எதிர்பார்ப்பு என்றாலே
ஏமாற்றம் தான்

தற்செயலாய்
உரிய தயாரிப்பில்லா
விஷயங்களில்
வெற்றி கிடைக்கையில்
செயலுக்கு
ரொம்ப யோசிக்கக்கூடாது

அதே தோல்வியானால்
எப்போதுமே
செயலுக்கு முன்
தயாரிப்பு அவசியம்

## தன் தரப்பு தீர்ப்புக்காக

பிறரிடம்
உள்ள கருத்து வேற்றுமைக்கு
எதிர் மனிதனிடம்
தன் விளக்கத்தை

'சொல்வது சரி தானே'

'நீங்களும் ஒத்து கொள்வீர்கள்'

'நீங்கள் எத்தனையோ
கேட்டு இருப்பீர்கள்'

'அவர் சொன்னதற்கு
வேறு என்ன அர்த்தம்
இருக்கமுடியும்'

என தன் தரப்பு
தீர்ப்புக்காக

சொல்கின்ற

வார்த்தைகள்

## இவைகளும் தான்...

சூழ்நிலை புரிந்து
இயங்குவது

சொல்வதற்கு
முழுமையாய்
செவி கொடுத்து
விட்டு பதிலளிப்பது

மாற்றுக்கருத்துக்கும்
மதிப்பளிப்பது

தேவை அறிந்து
கேட்கலாமே உதவுவது

சொன்னவற்றை
செய்வது
இயலவில்லை எனில்
கெடு முன்னே
சொல்லி
திருத்தப்பட்ட
இலக்கு கொண்டு
முடிப்பது

எதிர் மனிதனின்
பிடிக்காத பேச்சை
உடல் மொழியால்
வெளிப்படுத்தாமல்
இருப்பது

பிறரின்
குறைகளை
யோசித்து
பகிராமால்
இருப்பது

உடல் சார்ந்த
விமர்சனங்களை
தவிர்ப்பது

அனுமானங்களினாவும்
தான் கொண்ட எண்ணங்களினாலும்
உண்மையற்ற
எதிர்மறை கருத்துக்களை
சொல்லாதிருப்பது

விருப்பமில்லாதவரின்
தோல்விக்கும்
வருத்ததுக்கும்
சந்தோஷம்
கொண்டாமால் இருப்பது

சொந்த இழப்புக்கும்
ஏமாற்றத்துக்கும்
மனவேதனைக்கும்
கடமையை பாதிக்க செய்யாமால்
இருப்பது

கொடுக்கபட்ட
அதிகாரங்கள்
நிறைவேற்ற வேண்டிய
பொறுப்புக்கு என்று
உணர்வது

இவைகளும்
சொல்லிக்கொள்ள
வேண்டியவை தான்

பதவியும்

படிப்பும்
மரியாதையும்
வசதிகளும்
செல்வமும்
செல்வாக்கும்
மட்டும் அல்ல

—
*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# நான் அவன் (சிறுகதை)

எல்லாவற்றுக்கும் இருப்பது போல இதற்கும் ஆப் இருக்கிறது.

மெரூன் முதலில் தயங்கினாலும் வேறு வழி இல்லை என்று நம்பினான். அவனுக்கு இங்கிருந்து தப்பிக்க வேண்டும். இல்லையெனில் இந்த வாழ்வு அவனை முடக்கி ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடும். அவனுக்கு தெரிந்து விட்டது. சுற்றிலும் அழுத்தம். சூழல் கை மீறி விட்டதாக அவன் மனம் நம்பியது. சோர்வின் உச்சத்தில் என்ன செய்வதென தெரியாத தவிப்பு அவனை அலைக்கழித்தது. தன் வாழ்வின் போதாமைக்குள் கிடந்து கொந்தளிப்பது தாங்கொணா காயம். இந்த மாயத்தில் இருந்து மறைந்து விட விரும்பினான்.

மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வழி இருப்பதாக தெரிய வருகையில்... அதை செய்து பார்க்க முழுதாக விரும்பினான்.

வலை போட்டு தேடினான். சரியான பொருத்தம் எதுவென கண்டறிவது கடினம். ஒற்றைக் கடையில் இதுதான் பொருள் என்று பிடிபட்டு விடும். மொத்தக் கடையில் எதுவும் பொருள் என எதுவோ விடுபட்டு விடும்.

ஒவ்வொருவராக பார்த்தான். வயது ஒத்துப் போகிறது. வாழ்க்கை ஒத்து போகுமா. சந்தேகம் மானுட அரிப்பு. மண் அரிப்பு போல மனதின் அரிப்பும் முடக்கி விடும். ஏற்கனவே முடங்கிதான் கிடக்கிறான். தொட்டதெல்லாம் தோல்வி. மெரூன் தனக்கு பிடித்த கனவை மீண்டும் காண....
வேண்டிக்கொள்கிற தூக்கம் போல ஒரு தூளியின் மாயத்தை மனக்காற்றில் அசைத்தபடியே இருந்தான்.
வேட்டைக்கு போனால்கூட வெற்றி கிட்டும். மனதுக்கு பிடித்த மனிதர்களைத் தேடுவது மகத்தான தோல்வி பயத்தை உருவாக்கி விடும்.

ஆகவே... அதே வேலையாக இருந்தான்.

எந்நேரமும் தனக்கு தோதான ஆளைத் தேடிக்கொண்டே இருந்தான். வேறு வழி இல்லை. அது ஒன்றுதான் வழி. விழி

நிறைந்த தன் சோகம் எப்போது வேண்டுமானாலும் தன் மழையைக் கொட்டி விடும். பொறுமை இனி இல்லை. அப்படி இருந்தால் அதற்கு பொருளும் இல்லை. பொறுமையின் கனம் கொஞ்சம் கொஞ்சமாக அவனில் ஏறுகிறது. இனியும் சிறுமையாக முடியாது. சித்திரத்தில் மொட்டை மரமாகவே எத்தனைக் காலம் நிற்பது. ஒருவரும் வண்ணம் பூச தோன்றாத வாழ்வு இது. தப்பித்துக் கொள்ள வேண்டும். தாகத்தில் இருந்து தப்பித்து தடாகத்தில் குதித்து விட வேண்டும். தடாகத்தில் நீர் குறைந்திருந்தாலும்... சிறு வாலென நீந்தும் வேட்கைக்கு காத்திருந்தான்.

நல்லவேளை இப்போதெல்லாம் எதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

மானுடன்... மிக கவனமாக கையாள வேண்டிய பொருள். அவன் கண்டுபிடிப்புகள் மானுட நகர்வுக்கு உறுதுணையானவை. எங்கே எப்படி எதன் பொருட்டு எதைக் கையாள வேண்டும் என்பதே உட்பொதிந்த உன்னதம். மகோன்னத மரியாதைக்கு இதுதான் பொருள் சேர்க்கும் என்ற முடிவுக்கு வந்த போது... இப்படி ஒரு வாழ்வு முறை இருக்கிறது எனத் தெரிய வந்தது. உள்ளம் மகிழ்ந்தான். இது வரை கொண்ட துயரங்களைத் துடைத்தெடுக்கப் போவது பற்றி எப்போதும் சிந்தித்தான். இன்னமும் ஒரு படி மேலேறி சென்று கனவும் கண்டான். பகல் கனவு மானுடத்துக்கு மிக மிகத் தேவை. அது கொண்ட வலிமையே பிறகு சிந்தனைக்கு வல்லமை கொடுக்கும் சிறகு பொருத்தும்.

கண்டுபிடித்த மென் பொருளாளனுக்கு மானசீகமாய் வணக்கம் தெரிவித்தான். நன்றிகளின் நரம்புகள் தோல்வியில் இருப்பவனுக்கு நன்றாகப் புலப்படும். பகிரங்கமாய் பொதுவாக வானம் பார்த்து காட்டினான்.

ஒவ்வொருவராக பார்த்துக் கொண்டே வந்தான். போட்டோவில் அழகாக இருக்கிறார்கள். பயோடேட்டாவில் அவனை விட துயரமாக இருக்கிறார்கள். ம்ஹூம். கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும். அடுத்த ஐந்து வருடத்துக்காவது நினைத்த மாதிரி வாழ்ந்து விட வேண்டும். இந்த வாழ்வுக்கு கொடுத்த விலை அதிகம். ஆப் கேட்ட நுட்பமான கேள்விக்கெல்லாம் மிக நியாயமாக பதில் உரைத்தான்.

நமக்கு பிடித்த ஆளுக்கு நம்மை பிடிக்க மாட்டேன் என்கிறது. நம்மை பிடித்த ஆளை நமக்கு பிடிக்க மாட்டேன் என்கிறது. மும்முரமாக களைந்து அடுக்கி தேடிக்கொண்டே இருந்தான்.

இந்த மாதிரி டைப் ஆளுக்கு அந்த மாதிரி டைப் ஆளுங்க தான் சரி என்று ஒரு லிஸ்ட்டை காட்டியது ஆப். ஒவ்வொருவராக பார்த்துக் கொண்டே வந்தான்.

அவன் இவன்.... அவன் இவன்... அவன்

இவன்... என தட்டிக்கழித்துக் கொண்டே வந்தான். சட்டென ஒரு புள்ளியில் பிரகாசமாக ஒருவன் தெரிந்தான். பெயர் ஆழ்முகன். ஒத்த வயது. அப்படியே தனக்கு பிடித்த வாழ்க்கைக்குள் இருக்கிறான்.

ஏலே ஆழ்முகன்... என்று தன்னை அறிமுகம் செய்தான்.

ஏலே மெரூன் என்று பதிலும் வந்தது.

பேசினார்கள். ஆழ்முகன் தன் அயற்சியைப் பகிர்ந்தான். மெரூனுக்கு பரவால்ல போல தோன்றியது. மெரூன் தன் தோல்விகளைப் பகிர்ந்தான். இதெல்லாம் ஒரு விடயமா... என்று பட்டது அவனுக்கு. மாற்றி மாற்றி பேசினார்கள். ஒருவனுக்கு பெரிதாக தோன்றியவைகள்... இன்னொருவனுக்கு ஒன்றுமே இல்லை என்று தோன்றியது. ஒருவன் கண்ணீர் விடும் விஷயம் இன்னொருவனுக்கு சப்பை மேட்டராக தெரிந்தது. வாழ்வின் கோணமே இது தான். அதன் சிறப்பு வாய்ந்த வளைவுகளே இம்மாதிரி எதிர் எதிர் பார்வை தான்.

நிறைய அலசி ஆராய்ந்து.... மொத்தத்தில் அவன் வாழ்வு இவனுக்கு பிடித்திருந்தது. இவன் வாழ்வு அவனுக்கு பிடித்திருந்தது. இக்கரைக்கு அக்கரை பச்சை சரி தான்.

பேசி பேசி... இருவருமே ஒரு புள்ளியில் சரி என்றாகி விட்டார்கள். ஒருவருக்கு ஒருவர் பிடித்து விட்டது. நாள் குறித்தார்கள். ஒருவர் வாழ்வின் மீது ஒருவருக்கு இருக்கும் தேடலின் தீர்க்கம் இருவரிடமும் இருந்தது.

மெரூனுக்கு மனம் நிறைந்த நிம்மதி. இனி இந்த சோகம் இல்லை. பிரச்சனை இல்லை. பதற்றம் இல்லை. அயர்ச்சி இல்லை. அலுப்பு இல்லை. இதுவரை செய்த தவறுகளுக்கான குற்ற உணர்ச்சி இல்லை. தப்பிக்க போகிறோம். இனி புது வாழ்வு. புது பெயர். புது நோக்கம். புது உணர்வு. புது உள்ளுணர்வு. கிட்டத்தட்ட புது இதயம் கிடைத்தது போல. மூளை தயாராகி விட்டது. செல்கள் பழக கொஞ்ச நாட்கள் எடுக்கும். பழக்கி விடலாம்... நம்பினான். தன்னிலிருந்து தன்னை உதறி விட்டு இன்னொரு மனிதனாக மாறி விட கிடைத்த அறிய வாய்ப்பு இது. சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சந்திக்கும் வேளை வந்தே விட்டது.

மெரூனும் ஆழ்முகனும் ஒருவரையொருவர் ஆசையாய் பார்த்துக் கொண்டார்கள். ஏற்கனவே ஒருவரையொருவர் தெரிந்து கொண்ட எல்லாவற்றையும் பொருத்திப் பார்த்து உடல் மொழியைப் பெற்றுக் கொண்டார்கள். ஆழமாய் மூச்சிழுத்தபடி இருவருமே அவரவர் இடத்தில் இருந்து மாறினார்கள். ஆழ்முனாக மெரூனும்.... மெரூனாக ஆழ்முகனும்... மாறிக் கொண்டார்கள்.

அவன் வீட்டுக்கு இவனும் இவன் வீட்டுக்கு அவனும் செல்லப் போகிறார்கள். இனி இவன் தான்

அவன்... அவன் தான் இவன். அவன் விட்ட வாழ்வை தொடரும் இவன். இவன் விட்ட வாழ்வைத் தொடரும் அவன்.

மெரூனை விட்டு விட்டு ஆழ்முகனை உள்வாங்கி கொண்டு அவனாகவே மாறினான். அந்த நொடியில் இருந்து அதுதான் அவன் வாழ்வென்று ஆழமாய் நம்பினான். ஆழ்முகனும் அப்படியே நம்பினான். இனி தான் ஆழ்முகன் அல்ல. மெரூன். மெரூனாக வாழ்க்கையைத் தொடர போகிறான். உயிரோடு உடலோடு ஒரு மறுபிறப்பு.

இன்னொருவர் வாழ்வை வாழ ஒருவர் தேர்ந்தெடுக்கையில்.. அந்த ஒருவர் வாழ்வையும் வாழ இன்னொருவர் இருக்கிறார். உனக்கு கீழே உள்ளவர் கோடி இது தான் போல.

இவன் அவனாகவும் அவன் இவனாகவும் நடை உடை பாவனை பேச்சு மொழி என மாறிய புது வாழ்வை இதோ இந்த நொடி ஆரம்பித்து வைத்திருந்தது.

—

கவிஜி



**ஓவியம்:**
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.